Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்புப் பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, மார்ச் 27 2024 | இதழ் 256

# தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் தமிழகத்துக்கு 'நீட்' தேர்விலிருந்து விலக்கு வருமானவரி உச்சவரம்பு ரூ.10 லட்சம் கல்வி - வேலைவாய்ப்பில் மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு பா.ம.க. தேர்தல் அறிக்கை : ராமதாஸ் வெளியிட்டார்

*சென்னை, 27 மார்ச் 2024:* பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க.) நாடாளுமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை நிறுவனர் ராமதாஸ் இன்று வெளியிட்டார்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால் தமிழகத்திற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு, வருமான வரி உச்சவரம்பு ரூ.10 லட்சமாக அதிகரிக்கப்படும் உள்ளிட்டவை வாக்குறுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து தேர்தலை சந்திக்கும் பாமக 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்நிலையில், சென்னையில் உள்ள தனியார் ஹோட்டலில் அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்டோர் தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர்.

தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

2021ம் ஆண்டுக்கான மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்துவதற்கு வலியுறுத்தப்படும்.

அனைத்து சாதியினருக்கும் அவர்களின் மக்கள் தொகைக்கு இணையாக இட ஒதுக்கீடு வழங்கப்படும்.

சென்னையில் உச்சநீதிமன்ற கிளை கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாநில தன்னாட்சி அதிகாரத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

கல்வி, வேலைவாய்ப்பில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுத் துறை, பொதுத் துறை பதவி உயர்வுகளிலும் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும்.

தனியார் துறை, நீதித் துறை ஆகியவற்றிலும் இடஒதுக்கீடு கொண்டு வரப்படும்.




தமிழ்நாட்டில் தனியார் நிறுவனங்களில் 80% பணியிடங்களை உள்ளூர் மக்களுக்கு ஒதுக்க சட்டம் கொண்டு வரப்படும்.

இந்தியா முழுவதும் மத்திய அரசு அலுவலகங்களில் 30 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் 3 லட்சம் புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

குடும்பத் தலைவிகளுக்கு

மாதம் ரூ.3,000

இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.3,000 உரிமைத் தொகை வழங்கப்படும்.

விலைவாசி உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க நியாய விலைக் கடைகள் மூலம் உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகள் மானிய விலையில் வழங்கப்படும்.

வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படுவது உழவர்களின் உரிமையாக்கப்படும். அதற்காக தனிச் சட்டத்தை நிறைவேற்ற பா.ம.க. வலியுறுத்தும்.

ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,000, ஒரு டன் கரும்புக்கு ரூ.5,000 கொள்முதல் விலை.

அனைத்து விளைபொருட்களையும் அரசே கொள்முதல் செய்ய வசதியாக புதிய ஆணையம்.

மத்திய அரசில் வேளாண் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

வேளாண் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத காலங்களில் மாதம் ரூ.2,500 நிதியுதவி.

60 வயதைக் கடந்த உழவர்களுக்கு ரூ.3,000

60 வயதைக் கடந்த உழவர்களுக்கு மாதம் ரூ.3,000 ஒய்வூதியம்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட காய்கறிகள் மற்றும் உணவு தானியங்களுக்குத் தடை விதிக்கப்படும்.

தொழில் திட்டங்களுக்காக வேளாண் விளை நிலங்கள் கையகப்படுத்த தடை விதிக்கப்படும். கடலூர் மாவட்டத்தில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள 3 நிலக்கரி திட்டங்கள் கைவிடப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் என்.எல்.சி. நிறுவனத்தை தமிழகத்திலிருந்து அகற்ற நடவடிக்கை.

தமிழ்நாட்டை அணுஉலை இல்லாத மாநிலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான கால அட்டவணை வெளியிடப்படும்.

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கங்கை முதல் காவிரி வரையிலான இந்தியாவின் பெரும்பான்மையான நதிகள் இணைக்கப்படும். அதற்காக தனி ஆணையம் ஏற்படுத்தப்படும்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணைகட்டக் கர்நாடகத்திற்கு அனுமதி அளிக்கப்படாது.

மாநிலப் பட்டியலில் கல்வி

கல்வி பொதுப்பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படும்.

உயர்கல்வி கற்பதற்காக பொதுத்துறை வங்கிகளில் மாணவர்கள் பெற்ற கல்வி கடன்களை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னையில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கருவுற்ற பெண்களுக்கான மகப்பேறு கால மருத்துவ உதவி தற்போதுள்ள 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தியாவில் அனைவருக்கும் இலவச மருத்துவ சேவை வழங்கப்படும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அனைவரையும் சேர்ப்பதன் மூலம் இந்த இலக்கு எட்டப்படும்.

ரூ.1000 கோடியில் புற்றுநோய் மருத்துவ மையம்

சென்னையில் ரூ.1000 கோடி செலவில் தேசிய புற்றுநோய் மருத்துவ மையத்தை அமைக்கப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாட்டில் 20 மாவட்டங்கள் உட்பட நாடு முழுவதும் 300 புதிய மருத்துவக் கல்லூரிகள் மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசுகளுடன் இணைந்து தொடங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்கு புதிய ஒய்வூதியத்திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய ஒய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை பாமக வலியுறுத்தும்.

மத்திய அரசுக்கு கிடைக்கும் வருவாயில் நியாயமான பங்கை மாநிலங்களுக்கு கொடுக்க பாமக பாடுபடும்.

தனிநபர் வருமான வரி விலக்கு வரம்பை ரூ.3 லட்சத்தில் இருந்து ரூ.7 லட்சமாக உயர்த்த மத்திய அரசை பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

ரூ.7 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரையிலான வருவாய்க்கு 5% வரி வசூலிக்கப்படும். வருமான வரிச் சட்டத்தின் 87வது பிரிவின்படி ரூ.15,000 வரை வரி தள்ளுபடி அளிக்கப்படும் என்பதால் ரூ.10 லட்சம் வரை வருவாய் ஈட்டுபவர்கள் அரசுக்கு வரி செலுத்தத் தேவையில்லை.

ரூ.10 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரையிலான வருவாய்க்கு 10% வரி வசூலிக்கப்படும். ரூ.15 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரையிலான வருவாய்க்கு 20% வரி வசூலிக்கப்படும்.

தங்கம் மீதான இறக்குமதி வரி ரத்து

தங்கம் மீதான 15% இறக்குமதி வரி முற்றிலுமாக ரத்து செய்யப்படும். அதனால் தங்கம் விலை சவரனுக்கு ரூ.6 ஆயிரம் வரை குறையும்.

தமிழக மீனவர்கள் சிங்கள கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுக்க நிரந்தர தீர்வு காணப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
மார்ச் 27, 2024

# நாங்கள் குடும்பக் கட்சி தான்: தமிழகத்தில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் பணியாற்றும் கட்சி தி.மு.க.” தூத்துக்குடி பிரச்சார பொதுக்கூட்டத்தில் மு.க.ஸ்டாலின்

சென்னை, 27 மார்ச் 2024: “தமிழகத்தில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் பணியாற்றும் கட்சி தி.மு.க.” என்று குடும்ப அரசியல் விமர்சனத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளித்து பேசினார்.

இந்தியா கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் கனிமொழி எம்.பி., ராமநாதபுரம் நாடாளுமன்ற தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் நவாஸ்கனி ஆகியோரை தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் சிந்தலக்கரை யில் நேற்று இரவு நடந்த பிரச்சார கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து வைத்து பேசினார்.

அப்போது, அவர் கூறியதாவது:-

எப்போதும், தி.மு.க. கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்குத்தான் முதலில் தொகுதி பங்கீடு செய்யப்படும். பேராசிரியர் காதர் மொய்தீன் எப்போதும் நமக்கு உறுதுணையாக இருப்பவர். ஏன் என்றால், தி.மு.க. எப்போதும் சிறுபான்மை இயக்கத்துக்கு துணையாக இருக்கும் இயக்கம்.

கடந்த 2019-ம் ஆண்டு தேர்தலின்போது, நான் தூத்துக்குடியில் பேசியபோது, “என் தங்கை கனிமொழிக்கு வாக்களியுங்கள். அவர் நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவார், என் கடன் பணி செய்து கிடப்பதே என்று உழைப்பார் என்று கூறி வாக்கு கேட்டேன். நீங்களும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைத்தீர்கள்.

அவர் நாடாளுமன்றத்தில் பேசினார் என்று சொல்வதைவிட, ‘கர்ஜனை மொழி’-யாக முழங்கினார். தூத்துக்குடிக்காக மட்டும் அவர் பேசவில்லை. தமிழ்நாட்டிற்காகப் பேசினார். ஒட்டுமொத்த இந்தியாவிற்காக பேசினார்.

மழை வெள்ளம் ஏற்பட்டபோது, அவரே தண்ணீரில் இறங்கி, மக்களுடன் மக்களாக நின்று, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதை யெல்லாம் நீங்களே பார்த்தீர்கள். இதைக் கூறினால், பிரதமர் மோடி குடும்ப அரசியல் என்று பழைய பல்லவியைப் பாடுவார். எங்கள் மேல் எந்தக் குற்றச்சாட்டும், விமர்சனமும் வைக்க முடியாதவர்கள் செய்யும் அவதூறு அது.

மக்களுடன் மக்களாக இருந்து

பணியாற்றும் கட்சி

நாங்கள் உழைப்பதற்காக அரசியலுக்கு வந்திருக்கிறோம். அதனால்தான், அடிக்கடி சொல்கிறோம். ஆமாம், நாங்கள் குடும்ப கட்சிதான். தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நன்மை செய்கின்ற கட்சி. ஒவ்வொரு நாளும் காலை முதல், இரவு வரை மக்களுடன் மக்களாக இருந்து மக்களுக்காக பணியாற்றிக் கொண்டு இருக்கும் கட்சி.

கலவரத்தில் ஈடுபடாத நபர்கள் மீது பதிவு செய்யப்பட்ட 38 வழக்குகளை திரும்பப் பெற்றோம். போராட்டத்தின்போது காவல்துறை யினரால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்ட 93 நபர்களுக்கு, அவர்களும் - அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் அனுபவித்த மன வேதனைகளின் பொருட்டு ரூ.1 லட்சம் நிவாரண உதவி வழங்கப்பட்டது. காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டு, பிறகு இறந்த பரத்ராஜ் என்பவரின் தாயாருக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. திரும்ப பெறத் தகுதியுள்ள 38 வழக்குகளில் தொடர்புடைய நபர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காகத் தடையில்லாச் சான்றிதழ் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தட்டிக் கேட்க நீங்கள் தயங்குவது ஏன்?. நீங்கள்தான் பெரிய விஸ்வ குருவாயிற்றே! இலங்கையை உங்களால் கண்டிக்க முடியாதா? நீங்கள் விஸ்வ குருவா? இல்லை மவுனகுருவா?.

தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்ற ஒரு துரும்பையும் எடுத்துப் போடவில்லையே. எந்த முகத்தை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டு மீனவர்களிடம் ஓட்டு கேட்டு வருகிறீர்கள்?

தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்ற தவறிய பிரதமர் மோடி, திசை திருப்பும் எண்ணத்துடன் எங்கள் மேல் குறை சொல்கிறார். ஒரு பிரதமர் வாக்கு கேட்டு வருகிறார் என்றால், தன்னுடைய ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகளைக் கூறி வாக்கு கேட்க வேண்டும். மாறாக, பிரதமர் மோடி, எதிர்க்கட்சிகளைத் திட்டுவதில் நேரத்தை செலவு செய்து கொண்டு இருக்கிறார்.

தமிழ்நாட்டிற்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையாவது மோடி நிறைவேற்றியிருக்கிறாரா?. தமிழ்நாட்டிற்கு எதுவும் செய்யாமல், அவர் கொண்டு வரும் திட்டங்களுக்கு நான் தடையாக இருந்தேன் என்று கூறுகிறார். அவர் தமிழ்நாட்டிற்கு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்? தமிழ்நாட்டிற்கு என்ன சிறப்புத் திட்டம் கொண்டு வந்தீர்கள் என்று நானும் நாள்தோறும் கேட்டுக் கொண்டே இருக்கிறேன். ஒரே ஒரு சிறப்புத் திட்டத்தைக்கூட பத்தாண்டுகள் பிரதமராக இருந்த மோடியால் கூற முடியவில்லை.

தேர்தல் அறிக்கையை தயாரித்தவர்

நம்முடைய இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்ததும் என்னவெல்லாம் செய்யப் போகிறோம் என்று தேர்தல் அறிக்கையாக வெளியிட்டிருக்கி றோம். அந்த அறிக்கையைத் தயார் செய்வதற்கு தலைவர் யார் தெரியுமா? உங்கள் எம்.பி.தான். கனிமொழிதான் தலைவராக இருந்து அந்த அறிக்கையைத் தயாரித்துத் தலைமைக்குக் கொடுத்தார்.

தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும் “சொல்வதைச் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்!” இதுதான் வரலாறு. இந்த வரலாறு தொடர, வாக்குறுதிகள் நிறைவேற, நீங்கள் அனைவரும் இந்தியா கூட்டணியை ஆதரிக்க வேண்டும்.

வெள்ளம் வந்தபோது இங்கு களத்திலிருந்து மக்களுக்கு உதவியது யார்? தங்கை கனிமொழியும், அமைச்சர் கீதாஜீவனும், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனும் தானே மக்களுடன் மக்களாக இருந்து நிவாரணப் பணிகளைச் செய்தார்கள்.

இவர்கள் மட்டுமா? ஒட்டுமொத்த அமைச்சரவையுமே இங்குதானே இருந்தார்கள். ஓடோடி வந்து உதவி செய்தார்கள். நானும் உடனடியாக இங்கு வந்து உதவினேன். களத்தில் இருந்தவர்களின் உழைப்பால்தானே இயல்பு நிலை விரைவாக திரும்பியது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தூத்துக்குடிக்கு வந்து நிதி உதவியை வழங்கியதும், இந்த ஸ்டாலின்தான் இது எல்லாமே தமிழ்நாடு அரசின் மாநில நிதியிலிருந்து செய்து தரப்படு கிறது. இயற்கை பேரிடர் பாதிப்புகளை சரிசெய்ய 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை கோரினோம். ஒன்றிய அரசிடமிருந்து நிதி வரவில்லை. ஆனால், அதை ஒரு காரணமாக நாங்கள் மக்களிடம் கூறவில்லை. மோடி தரவில்லை என்றால் என்ன? உங்களில் ஒருவனான இந்த ஸ்டாலின் தருவேன் என்ற உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றினேன்.

வெள்ளம் பாதித்தபோது, டெல்லியில் இருந்து அழைப்பு வந்தது. தொலைபேசியில் என்னிடம் பேசிய பிரதமர் மோடி என்ன கூறினார் தெரியுமா? வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அமைச்சர் நிர்மலா சீதாராமனை அனுப்பி இருக்கிறேன், அவர் பார்வையிட்ட பிறகு, நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று கூறினார். ஆனால், நிர்மலா சீதாராமன் வந்துவிட்டு சென்றார்.

பிரதமர் பதவியில் இருப்பவர் கூறினாரே என்று நம்பினேன். வழக்கமாக, மக்களுக்குக் கூறும் பொய்யைத்தான் எனக்கும் பரிசாகக் கொடுத்தார். மக்களால் முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர்தான் பிரதமர் மோடி. பொய்களை மட்டுமே பரிசாகத் தரும் பிரதமருக்கு, ஏமாற்றத்தைப் பரிசாக தர தயாராகிவிட்டீர்களா?. எனவே உங்கள் வாக்கு தமிழ்நாட்டைக் காக்கட்டும். இந்தியாவைக் காக்கட்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ரகுபதி, ராஜகண்ணப்பன், கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பெங்களூரு குண்டு வெடிப்பு தொடர்பாக சென்னை, ராமநாதபுரம் உள்ளிட்ட 5 இடங்களில் என்ஐஏ சோதனை




சென்னை, 27 மார்ச் 2024: பெங்களூரு ராமேஸ்வரம் கபே குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக, தமிழ்நாட்டில் சென்னை மற்றும் ராமநாதபுரத்தில் உள்ள 5 இடங்களில் இன்று என்ஐஏ அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர்.

கடந்த மார்ச் 1ஆம் தேதி பெங்களூருவில் ராமேஸ்வரம் கஃபே என்ற உணவகத்தில் குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. நாடாளுமன்ற தேர்தல் நடக்க உள்ள நிலையில், இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

மேலும், இந்த குண்டு வெடிப்பில் தொடர்புடையவர்கள் கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகளால் தேடப்பட்டு வரும் பழைய குற்றவாளிகள் இருவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி, அந்த 2 நபர்களும் இக்குண்டு வெடிப்பு நிகழ்வதற்கு முன்பாக, சுமார் ஒரு மாத காலம் சென்னையில் தங்கியிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சென்னையில் இந்த நபர்கள் எங்கெல்லாம் தங்கி இருந்தார்கள்? எனவும், யாருடைய உதவியில் தங்கி இருந்தார்கள்? எனவும், யாரையெல்லாம் சந்தித்தார்கள்? எனவும் பல்வேறு கோணங்களில் என்ஐஏ அதிகாரிகள் விவரங்களை சேகரித்து வந்தனர். இந்த நிலையில், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு இரண்டு மாநிலங்களிலும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று அதிரடி சோதனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் ஒருபகுதியாக இன்று தமிழ்நாட்டில், 5 இடங்களில் சோதனை நடத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. சென்னையில் மூன்று இடங்களிலும், ராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு இடங்களிலும் இந்த சோதனை நடத்தப்படுவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மேலும், பெங்களூரைச் சேர்ந்த சிறையில் இருக்கும் குற்றவாளி மெகபூப் பாஷா, பீகார் சிறையில் இருக்கும் குற்றவாளி காஜா மொய்தீன் இவர்களின் கூட்டாளிகள் உதவியுடன் தான் பெங்களூரு குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு முன்பாக இருவரும் சென்னையில் தங்கி இருக்கலாம் என்ற கோணத்திலும் இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது, சென்னை மண்ணடி மூட்டைக்காரன் தெருவில் உள்ள அப்துல்லா என்பவர் வீட்டிலும், முத்தியால்பேட்டை விநாயகர் கோயில் தெருவில் உள்ள ஒருவரின் வீட்டிலும் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. மெகபூப் பாஷா, காஜா மொய்தீன் ஆகியோர் திருவல்லிக்கேணி பகுதியில் தங்கி இருந்த விடுதிலும் என்ஐஏ அதிகாரிகள் சோதனை நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ்நாடு, தெலங்கானா, டெல்லியில் மார்பக புற்றுநோய் பாதிப்பு அதிகம் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தகவல்

சென்னை, 27 மார்ச் 2024: தமிழ்நாடு, தெலங்கானா, கர்நாடகா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்களில் மார்பகப் புற்றுநோய் பாதிப்பு அதிகம் இருப்பதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஆய்வறிக்கையில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ஐசிஎம்ஆர்) அண்மை ஆய்வின்படி, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது, தமிழ்நாடு, தெலங்கானா, கர்நாடகா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்களில் மார்பகப் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ளது. இந்தியாவில் அடுத்த ஆண்டுக்குள் மார்பகப் புற்றுநோயின் தாக்கம் கணிசமாக அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு 2012-2016 ஆம் ஆண்டுக்கு இடையில் நடத்தப்பட்ட இந்த ஆய்வறிக்கையில், நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் மார்பக புற்றுநோயின் பாதிப்பு குறைவாக உள்ளதாக தெரிவித்துள்ளது. தேசிய புற்றுநோய் பதிவுத் திட்டத்தின் (என்சிஆர்பி) கீழ், நாடு முழுவதும் உள்ள மக்கள்தொகை அடிப்படையிலான 28 புற்றுநோய் பதிவேடுகளின் தரவைப் பயன்படுத்தி, இந்தியாவில் மார்பகப் புற்றுநோயின் பாதிப்பு குறித்த இந்த ஆய்வு கடந்த 2016-ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

இதனிடையே, 'குளோபல் கேன்சர் அப்சர்வேட்டரி' நடத்திய ஆய்வின்படி, தென் மத்திய ஆசியாவில் மார்பகப் புற்றுநோயின் தாக்கம் கடந்த 2016 ஆம் ஆண்டில் 21.6 விகிதமாகவும் கடந்த 2018-ஆம் ஆண்டில் 25.9 விகிதமாகவும் இருந்தது. பரந்த அளவிலான தரவுகளைப் பயன்படுத்தி தேசிய மற்றும் துணை தேசிய பாதிப்புகள் மட்டுமே இந்த ஆய்வில் மதிப்பிட்டுள்ளன. அதன்படி, நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் மார்பக புற்றுநோயின் பாதிப்பு குறைவாக உள்ளது தெரிய வந்துள்ளது.

உடற்பயிற்சிகள் செய்யாமல் இருத்தல், அதிக உடல் பருமன், தாமதமான திருமணம் மற்றும் பிரசவம் ஆகிய காரணிகளால் நகர்ப்புறங்களில் மார்பகப் புற்றுநோயின் பாதிப்பு அதிகம் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய நகரங்களுக்கு இடையிலான பட்டியலில் ஐதராபாத், சென்னை, பெங்களூரு மற்றும் டெல்லி ஆகியவை பட்டியலில் முதலிடத்தில் உள்ளன.

# அதிக கோடீஸ்வரர்கள் கொண்ட நாடுகள்: இந்தியாவுக்கு 3 வது இடம்

சென்னை, 27 மார்ச் 2024: 'ஆசியாவிலேயே மும்பையில் தான் அதிக கோடீஸ்வரர்கள் உள்ளனர்' என்று ஹூருன் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

'2024-ம் ஆண்டின் உலக கோடீஸ்வரர்களின் பட்டியலை ஹூருன் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலின்படி, ஆசியாவிலேயே மும்பையில் தான் அதிக கோடீஸ்வரர்கள் (அதாவது 92 கோடீஸ்வரர்கள்) இருக்கிறார்கள். இது சீனாவில் உள்ள பீஜிங்கை (91 கோடீஸ்வரர்கள்) விட அதிகமாகும். இந்த இடத்தை மும்பை பிடிப்பது இதுவே முதல்முறையாகும். மேலும் உலக அளவில் மும்பை மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

மும்பையில் உள்ள கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பை ஒட்டுமொத்தமாக சேர்க்கும்போது, அதன் மதிப்பு 445 பில்லியன் டாலர்கள் (44,500 கோடி டாலர்கள்) ஆகும். இது கடந்த ஆண்டை விட, 47 சதவீதம் அதிகம். இந்த அறிக்கையில் அதிக கோடீஸ்வரர்கள் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தை (271 கோடீஸ்வரர்கள்) பிடித்துள்ளது. முதல் இரண்டு இடங்களை முறையே சீனா (814 கோடீஸ்வரர்கள்) மற்றும் அமெரிக்கா (800 கோடீஸ்வரர்கள்) பிடித்துள்ளது. கடந்த ஆண்டு இந்த பட்டியலில் இடம்பிடித்த சீனாவை சேர்ந்த 208 கோடீஸ்வரர்கள் இந்த ஆண்டு பட்டியலில் இடம்பிடிக்கவில்லை.

இந்த ஆண்டு கோடீஸ்வரர்கள் பட்டியலில் புதியதாக 480 பேர் இணைந்துள்ளனர். அவர்களில் 132 பேர் அமெரிக்கவை சேர்ந்தவர்கள். 94 பேர் இந்தியாவை சேர்ந்தவர்கள். 55 சீனாவை சேர்ந்தவர்கள் ஆவர். உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் முதலாவது இடத்தை பிடித்துள்ளார். கடந்த 4 ஆண்டுகளில், இவர் மூன்று முறை முதலாவது இடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பட்டியலில் இரண்டாவது இடத்தை அமேசான் நிறுவனர் ஜெப் பிசோஸ், நான்காவது இடத்தை மெட்டா நிறுவனர் மார்க் ஜூக்கர்பர்க், ஆறாவது இடத்தை வாரன் பபெட், எட்டாவது இடத்தை பில் கேட்ஸ் மற்றும் பத்தாவது இடத்தை ரிலையன்ஸ் நிறுவனர் முகேஷ் அம்பானி பிடித்துள்ளார்கள்.

# கார், மோட்டார் சைக்கிள் கூட இல்லாத மிகப் பெரிய கோடீஸ்வர வேட்பாளர் ஏ.சி.சண்முகம்

சென்னை, 27 மார்ச் 2024: வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் கதிர் ஆனந்த் ரூ.89 கோடி சொத்து உள்ளதாக தெரிவித்துள்ளதில், 5 கார்கள் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வேட்புமனுக்களை தாக்கல் செய்த ஏ.சி.சண்முகம், சொத்து மதிப்பாக ரூ. 152 கோடி பதிவு செய்துள்ளார். பல்வேறு வங்கிகளில் உள்ள இருப்புத் தொகை, வைப்புத் தொகை, பங்கு முதலீடு, நகை என்று அசையும் சொத்துகளாக ஏ.சி.சண்முகத்திடம் ரூ. 36 கோடியும் மனைவி லலிதா லட்சுமியிடம் ரூ. 37 கோடியும் உள்ளது.

ஏ.சி.சண்முகம் பெயரில் அசையா சொத்து ரூ 7.43 கோடி மதிப்பிலும், லலிதா லட்சுமியின் பெயரில் ரூ 16.02 கோடியும் அசையா சொத்துகள் உள்ளன. ஏ.சி. சண்முகம் பெயரில் 8 அடுக்குமாடி குடியிருப்புகளும் அவருடைய மனைவி பெயரில் 2 அடுக்குமாடி குடியிருப்புகளும் உள்ளன. ஆனால், இவர் பெயரிலும் மனைவி பெயரிலும் கார்கள், பைக் ஏதும் சொந்தமாக இல்லையாம்.

அதேபோல், ஈரோடு அதிமுக வேட்பாளர் ஆற்றல் அசோக்குமார் தாக்கல் செய்துள்ள தேர்தல் உறுதிமொழி பத்திரத்தில், தனக்கும் தன் மனைவிக்கும் ரூ.650 கோடிக்கும் அதிகமாக சொத்துக்கள் உள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால், தன்னிடம் காரோ, மோட்டார் சைக்கிளோ இல்லை என்று தெரிவித்துள்ளார். அதேவேளை, திமுக வேட்பாளர் பிரகாஷ் தாக்கல் செய்துள்ள உறுதிமொழி படிவத்தில் ரூ. 5 கோடி அளவுக்கு சொத்து காட்டியுள்ளதில், மொத்தம் 3 கார்கள், 2 மோட்டார் சைக்கிள்கள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# இதுவரை ரூ.69.70 கோடி ரொக்கம், பொருட்கள் பறிமுதல் தமிழ்நாட்டில் 6.23 கோடி வாக்காளர்கள் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு பேட்டி



சென்னை, 27 மார்ச் 2024: தமிழ்நாட்டில் மொத்தம் 6 கோடியே 23 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு தெரிவித்தார்.

நேற்று வரை ரூ.69.70 கோடி மதிப்புள்ள ரொக்க பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சென்னையில் இன்று சத்ய பிரதாசாகு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் மொத்தம் 6 கோடியே 23 லட்சத்து 26 ஆயிரத்து 901 வாக்காளர்கள் மக்களவை தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதில் 3 கோடியே 6 லட்சத்து 2 ஆயிரத்து 367 பேர் ஆண்கள். 3 கோடியே 17 லட்சத்து 16 ஆயிரத்து 69 பேர் பெண்கள். இதில், மூன்றாம் பாலினத்தவர்கள் 8,465 பேர் அடங்குவர். கடந்த 2 மாதங்களில் மட்டும் 5 லட்சம் பேர் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்ந்துள்ளனர்.

கூடுதல் வாக்குச்சாவடி

80 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 6.14 லட்சம் பேர் தபால் மூலம் வாக்களிக்கலாம். இதுவரை 68,144 வாக்கு மையங்கள் இருக்கும் சூழலில், தற்போது கூடுதலாக 177 வாக்குச்சாவடிகளை அமைக்கத் தேர்தல் ஆணையத்தின் சார்பில் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளிலும் 7 லட்சம் பேர் தேர்தல் பணிகளில் ஈடுபட உள்ளனர். தேர்தல் அலுவலர்களுக்கு ஏப்ரல் 7ம் தேதிக்குள் 2ம் கட்ட பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் 117 தேர்தல் பார்வையாளர்கள் கண்காணிப்பில் ஈடுபட உள்ளனர். அதன்படி, 39 பொது பார்வையாளர்கள், 20 காவல் பார்வையாளர்கள், 58 செலவின பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேசமயம் 190 கம்பெனிகளை சேர்ந்த மத்திய பாதுகாப்பு படை தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இதுவரை 25 கம்பெனி மத்திய பாதுகாப்பு படையினர் வந்துள்ளனர்.

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த பிறகு இதுவரை சுமார் ரூ.70 கோடி மதிப்புள்ள பணம், தங்கம் மற்றும் மதுபானம் உள்ளிட்ட பிற பொருட்கள் தேர்தல் பறக்கும் படை மூலம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் விதிமீறல் பற்றி புகார் அளிப்பவர்கள் தங்கள் விவரத்தை மறைத்துவிட்டு புகார் அளிக்கலாம்.

1950 ல் புகார் அளிக்கலாம்

தேர்தல் தொடர்பான புகார்களை 1950 என்ற எண்ணில் அளிக்கலாம். இது பொதுவான நம்பர். இதற்கு முன் அந்தந்த மாவட்ட எஸ்டிடி கோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதுவரை தமிழ்நாடு முழுவதும் ரூ.69.70 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் ரொக்கம் மட்டும் ரூ.33.31 கோடி. வருமானவரித்துறை மூலம் ரூ.6.51 கோடி கைப்பற்றப்பட்டுள்ளது.

648 நட்சத்திர பேச்சாளர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

தனியார் கட்டிடங்களில் 1,16,342 சுவர் விளம்பரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

பொது இடங்களில் 3 லட்சத்து 16 ஆயிரத்து 151 சுவர்களில் விளம்பரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இதுவரை தமிழகம் முழுவதும் ரூ.33.31 கோடி ரொக்கம், ரூ.33 கோடி மதிப்பிலான தங்கம் உட்பட ரூ.69.70 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார். சி-விஜில் செயலி வாயிலாக அளிக்கப்படும் புகார்களுக்கு 100 நிமிடங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# பயனர்களுக்கு விவேகமான முதலீடுகளை மேற்கொள்ள உதவுவதற்கு அப்ஸ்டாக்ஸ் நிறுவனம், “ கட் தி கிட் கிட் “ பிரச்சாரத்தை அறிமுகப்படுத்துகிறது



சென்னை, 27 மார்ச் 2024: இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் முதலீட்டுத் தளங்களில் ஒன்றான அப்ஸ்டாக்ஸ் (ஆர் கே எஸ் வி செக்யூரிட்டீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்றும் அழைக்கப்படுகிறது), இன்று ‘கட் தி கிட் கிட், கெட் இன் தி மார்கெட்’ என்ற புதிய பிராண்ட் பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியது. சந்தையில் ஒழுங்கற்ற மற்றும் அடிப்படை மதிப்புக்கு தொடர்பில்லாத பரிவர்த்தனைகளைக் குறைக்கவும் நன்கு அறியப்பட்ட முதலீட்டு முடிவுகளை எடுப்பதன் மூலம் “சரியான முதலீடு” செய்யவும் பயனர்களுக்கு உதவுவதில் இந்த பிரச்சாரம் கவனம் செலுத்துகிறது. இதன் மூலம், அப்ஸ்டாக்ஸ், ஒரு வர்த்தக மற்றும் முதலீடு செய்வதற்கான தளமாக இருப்பதைத் தாண்டி, பயனர்களின் முழுமையான செல்வத்தை உருவாக்கும் பயணத்திற்கான ஒரு இலக்கை நோக்கி பல்வகைப்படுத்த விரும்புகிறது. அதன் உள் ஆராய்ச்சியின் மூலம், பயனர்கள் தவறாக விற்பனை செய்யும் தந்திரங்கள், அதிகப்படியான தகவல் மற்றும் வளங்கள் மற்றும் புரியாத பிதற்றல்களில் வழிசெலுத்துதல் போன்ற சவால்களை அடிக்கடி எதிர்கொள்வதை அப்ஸ்டாக்ஸ் கண்டறிந்துள்ளது. எடுத்துக்காட்டாக, மியூச்சுவல் ஃபண்டுகளில் முதலீடு செய்யும் போது, பயனர்கள் முக்கியமான ஆபத்து மற்றும் செலவு அளவீடுகளைக் காட்டிலும் வருமானத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றனர். அதேபோல், அவர்கள் ஒரே மாதிரியான மனநிலைக்கு அடிபணிந்து முழுமையான பகுப்பாய்வு செய்யாமல் ரூ. 1 கோடி கால முறை காப்பீட்டுத் திட்டத்தை தேர்வு செய்யலாம். இத்தகைய செயல்கள் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையின்மைக்கு வழிவகுக்கின்ற மோசமான தகவலறிந்த முடிவுகளை விளைவிக்கிறது. இந்த சவால்களை உணர்ந்து, அப்ஸ்டாக்ஸ் அதன் பயனர்களுக்கு அதிக பாரம் சுமத்தல் மற்றும் சிக்கல்களை கையாள இந்த முன்முயற்சியை எடுத்துள்ளது.

இந்த நிறுவனம் சந்தையின் " கட் தி கிட் கிட் " (ஒழுங்கற்ற மற்றும் அடிப்படை மதிப்புக்கு தொடர்பில்லாத பரிவர்த்தனைகளைக் குறைக்க ) செய்ய விரும்புகிறது, மேலும் பயனர்கள் தங்களுக்கு சரியானவற்றில் முதலீடு செய்வதன் மூலம் செல்வத்தை உருவாக்கத் தொடங்க ஊக்குவிக்கிறது. இந்தச் செய்தியை அனைத்து முதலீட்டாளர்களுக்கு தெரிவிக்கும் முயற்சியில் , அப்ஸ்டாக்ஸ் ஆனது “கட் தி கிட் கிட், கெட் இன் தி மார்கெட்” என்ற கருத்தை மையமாகக்கொண்ட ஒரு பிரச்சார வீடியோவை வெளியிட்டுள்ளது. இந்த வீடியோவில், ஒரு ஜாக்ரதாவின் கலகலப்பான சூழ்நிலையின் மத்தியில் முதலீடு செய்ய விரும்பும் குழப்பமான கதாநாயகன், தகவலறிந்த முடிவெடுப்பதற்காக உயர்தர பரஸ்பர நிதிகள் மற்றும் நிதித் தரவுகளுக்கான அணுகலை வழங்குகின்ற அப்ஸ்டாக்ஸ் செயலிக்கு அறிமுகப்படுத்தப்படும் வரை மியூச்சுவல் ஃபண்டுகளில் முதலீடு செய்வது பற்றிய குறிப்பிடல் ஒரு " கிட் கிட் " என்ற கோரஸை கலைஞர்களிடமிருந்து பார்வையாளர்களிடமிருந்தும் வெளிப்படுத்துகிறது. அடுத்த சில வாரங்களில் மேலும் இரண்டு பிரச்சார வீடியோக்களை வெளியிடவும் இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. முதலீடு என்று வரும்போது சரியான தகவலுடன் மக்கள் எவ்வாறு போராடுகிறார்கள் என்பதை இந்த வீடியோக்கள் சித்தரிக்கும், ஆனால் பயனர்கள் துரத்துவதைக் குறைத்து, சரியான முறையில் முதலீடு செய்ய அனுமதிக்கும் வழிகாட்டுதலை அப்ஸ்டாக்ஸ் மூலம் பெறலாம். இந்த பிரச்சாரத்தை துவக்கி வைத்து பேசிய அப்ஸ்டாக்ஸ் இன் இணை நிறுவனர் கவிதா சுப்ரமணியன், “இந்தியா எப்போதுமே முதலீடு செய்யும் நாடாக இல்லாமல் ஒரு அதிக சேமிப்பு நாடாக இருந்து வருகிறது. முதல் முறை முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்வதற்கான சரியான அறிவு மற்றும் வளங்களும் இல்லாதிருப்பது இப்படி இருப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. இது முதலீட்டாளர்களிடையே குழப்பம் மற்றும் நம்பிக்கையின்மைக்கு வழிவகுக்கின்ற மோசமான தகவலறிந்த முதலீட்டு முடிவுகள் மற்றும் நிதி இழப்புகளை ஏற்படுத்துகிறது. தெளிவான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்க ஒரு நம்பகமான நிதி பங்குதாரர் இல்லாமல், தனிநபர்கள் தங்கள் முதலீட்டு பயணத்தைத் தொடங்குவதைத் தவிர்க்கிறார்கள் அல்லது தவறாக வழிநடத்தப்பட்ட முடிவுகளை எடுக்கிறார்கள், இறுதியில் சந்தையில் இருந்து விலகுகிறார்கள் அல்லது மேலும் இழப்புகளைத் தாங்கிக்கொள்கிறார்கள். அப்ஸ்டாக்ஸ் இல் நாங்கள், அவர்கள் அத்தகைய ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்கின்ற வகையில், அனைத்து சொத்து வகுப்புகளிலும் புத்திசாலித்தனமாக முதலீடு செய்வதற்குத் தேவையான கருவிகள் மற்றும் அறிவைக் கொண்டு ஒவ்வொரு இந்தியருக்கும் அதிகாரம் அளிப்பதன் மூலம் இந்த சவாலை எதிர்கொள்ள நோக்கம் கொண்டுள்ளோம்." என்று கூறினார்.

இந்த பிரச்சாரம் ஜியோ மற்றும் பிற டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக தளங்களில் வீடியோ விளம்பரங்களை உள்ளடக்கும். பெருநகரங்கள், அடுக்கு-2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் இலக்குப் பிரிவுகளை சென்றடைய டிஜிட்டல் சேனல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்ஸ்டாக்ஸ் ஆனது, பயனர்கள் பல்வேறு சொத்து வகுப்புகள் மூலம் சரியான முறையில் முதலீடு செய்து செல்வத்தை உருவாக்க உதவுகின்ற ஒரு ஒற்றை குறிக்கோளுடன் மியூச்சுவல் ஃபண்டுகள், காப்பீடு, பங்குகள், இலக்கு அடிப்படையிலான முதலீடு என பல்வேறு நிதித் தயாரிப்புகளை வழங்குகிறது, இந்த நிறுவனம் தற்போது 13 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது, மேலும் பங்குகள், பரஸ்பர நிதிகள், தங்கம் போன்றவற்றில் நீண்டகால முதலீட்டுத் தேவைகளை தீர்க்கும் ஒரு எளிமையான முதலீட்டு தளமான 'இன்வெஸ்ட்மென்ட் மோட் மற்றும் மேம்பட்ட அம்சங்களைத் தேடும் மேம்பட்ட (விருப்பங்கள்) வர்த்தகர்களுக்கான ‘ப்ரோ’ அல்லது ‘டிரேட்’ மோட் ஆகிய இரண்டு பயன்முறைகளை பயனர்களுக்கு வழங்கும் ஒரே செயலி இதுவாகும்.

கூடுதலாக, அதன் " அப்லேர்ன் " முன்முயற்சியின் கீழ், நாட்டின் பல கல்வி நிறுவனங்களில் நிதி கல்வியறிவு கருத்தரங்குகளை அப்ஸ்டாக்ஸ் நடத்துகிறது; மேலும் " முதலீட்டின் 5 உண்மைகள்" என்ற ஒரு கற்றல் திட்டத்தையும் தொடங்கியுள்ளது. இந்த முன்முயற்சிகள் மூலம், ஆரம்ப கட்ட முதலீடு மற்றும் நிதி சுதந்திரத்தை அடைவதன் முக்கியத்துவத்தைப் பற்றி கற்பிக்கவும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையம் அப்ஸ்டாக்ஸ் நோக்கமாகக் கொண்டுள்ளது. நிகழ்நேர சந்தைச் செய்திகளில் பயனர்கள் தொடர்ந்து இருக்க உதவுவதற்கு , அப்ஸ்டாக்ஸ் அதன் செயலியில் "அப்நியூஸ்" என்ற செய்திப் பகுதியைச் சேர்த்துள்ளது. ஒழுங்கற்ற மற்றும் அடிப்படை மதிப்புக்கு தொடர்பில்லாத பரிவர்த்தனைகளைப் பற்றிய செய்திகளை பிரித்தெடுப்பதற்கான தொழில்நுட்பத்தை இந்த இயங்குதளம் பயன்படுத்துகிறது. நிறுவனத்தின் அறிவிப்புகள், காலாண்டு முடிவுகள் அல்லது துறைசார் புதுப்பிப்புகள் என அனைத்தையும் பயனர்கள் நியூஸ் டேப் இன் கீழ் காணலாம்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# சர்வேஸ்பேரோ "ஃப்ளை இன்" முன்முயற்சியுடன் 2000 பறவை இல்லங்களை உருவாக்குகிறது



சென்னை, 27 மார்ச் 2024: உலக சிட்டுக்குருவி தினத்தை முன்னிட்டு, நகர்ப்புற நிலப்பரப்புகளில் சிட்டுக்குருவிகளின் வீழ்ச்சியை மாற்றியமைக்கும் நோக்கில், சர்வே ஸ்பாரோஸ் "ஃப்ளை இன்" என்ற முயற்சியைத் தொடங்கியுள்ளது. முன்முயற்சியின் விளைவாக கிட்டத்தட்ட 2,000 சிட்டுக்குருவி வீடுகள் கட்டப்பட்டன, இது ஒரு காலத்தில் பழக்கமான இந்த பறவைகளை நகர சூழலில் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான கூட்டு முயற்சியின் அடையாளமாக இருந்தது.

இந்த திட்டம் பிப்ரவரி 21, 2024 அன்று, சிட்டுக்குருவிகள் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற கூடுகலின் கூட்டாண்மை மூலம் தொடங்கப்பட்டது. சர்வே ஸ்பாரோவின் நிறுவனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஷிஹாப் முஹம்மது தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில், சர்வே ஸ்பாரோவின் சென்னை அலுவலகத்தில் முதல் 150 பறவைக் கூடங்களை ஆர்வத்துடன் ஊழியர்கள் உருவாக்கினர். இந்த வேகம் சர்வேஸ்பாரோவின் கொச்சி அலுவலகத்தில் தொடர்ந்தது, அங்கு கூடுதலாக 100 பறவைக் கூடங்கள் கூடியிருந்தன. ரேவூர் பத்மநாப செட்டியின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் ஒத்துழைப்புடன், சுமார் 1,800 சிட்டுக்குருவி வீடுகள் மாணவர்களால், தன்னார்வலர்களின் உதவியோடு கட்டப்பட்டன. இந்த கூட்டு முயற்சியின் மொத்த தாக்கத்தை ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லுக்கு கொண்டு வந்தது.

"நகரமயமாக்கல் நமது இயற்கையான கூட்டாளிகளை அச்சுறுத்தும் சகாப்தத்தில், ஃப்ளை இன் போன்ற முன்முயற்சிகள் ஒரு காலத்தில் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையே இருந்த நல்லிணக்கத்தை நமக்கு நினைவூட்டுகின்றன" என்று ஷிஹாப் முஹம்மது கூறினார், இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. "சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஆதரிப்பதற்காக நாங்கள் கூட்டாக மேற்கொள்ளக்கூடிய சாத்தியமான செயல்களுக்கான சான்றாக இந்த முயற்சியை நாங்கள் காண்கிறோம்" என்று அவர் கூறினார்.

இதன் விளைவாக, இயற்கையும் சமூகங்களும் இணக்கமாக வாழும் எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு, தாக்கத்தை ஏற்படுத்தும் மாற்றங்களைச் செய்வதில் சர்வேஸ்பேரோ உறுதியுடன் இருக்கும். ஒரு நிலையான மற்றும் மிகவும் மகிழ்ச்சியான உலகத்திற்காக உண்மையான மாற்றத்தை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்பு இங்கே நிச்சயமாக உள்ளது.

# சென்னையில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட யமஹா ட்ராக் டே நிகழ்வு 650க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள ரசிகர்கள் பங்கேற்றனர்




சென்னை, 27 மார்ச் 2024: இந்தியா யமஹா மோட்டார் (ஐ ஒய் எம்) பிரைவேட் லிமிடெட், தனது வாடிக்கையாளர்களுக்காக மார்ச் 23-24, 2024 அன்று சென்னையில் உள்ள புகழ்பெற்ற மெட்ராஸ் இன்டர்நேஷனல் சர்க்யூட்டில் ஒரு தனித்துவமான டிராக் டே நிகழ்வை ஏற்பாடு செய்தது. இது கால் ஆஃப் தி ப்ளூ" பிராண்ட் முன்முயற்சி, சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் இருந்து 650 க்கும் மேற்பட்ட அர்ப்பணிப்புள்ள யமஹா ஆர்வலர்கள் மற்றும் 300 யமஹா உரிமையாளர்களின் உற்சாகமாக பங்கேற்றனர், இது ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியைக் குறிக்கிறது.

சென்னை, மெட்ராஸ் இன்டர்நேஷனல் சர்க்யூட்டில் நடந்த இரண்டு நாள் ட்ராக் டே நிகழ்வு, யமஹா உரிமையாளர்களுக்கு தங்கள் சொந்த யமஹா மோட்டார்சைக்கிள்களை ஒரு பாதையில் ஓட்டிச் செல்லும் அற்புதமான வாய்ப்பை வழங்கியது. பங்கேற்பாளர்கள் லீன் ஆங்கிள்கள், அதி வேக கோணங்கள், துல்லியமான பிரேக்கிங் மற்றும் உடல் இயக்கம் ஆகியவற்றின் இயக்கவியலை ஆராயும் வாய்ப்பைப் பெற்றனர், அதே நேரத்தில் தங்கள் கணினிகளில் கிடைக்கும் விரைவான ஷிஃப்டர்கள் மற்றும் இழுவைக் கட்டுப்பாட்டு அமைப்புகள் போன்ற மேம்பட்ட அம்சங்களின் நன்மைகளைக் கண்டறியவும் உதவுகிறது.

யமஹாவின் பிரியமான பைக்குகளின் காட்சிக்கு இணையாக, ஒய் இசட் எஃப்-ஆர்3 மற்றும் எம்டி-03 ஆகியவற்றின் வசீகரத் தன்மையை பார்வையாளர்கள் விருந்தளித்தனர், யமஹா இந்தியாவின் வரிசையில் இரண்டு சமீபத்திய சேர்க்கைகள் அந்தந்த வகைகளில் செயல்திறன் மற்றும் பாணி தரங்களை மறுவரையறை செய்ய தயாராக உள்ளன. யமஹா ஆடைகள் மற்றும் அணிகலன்களின் காட்சிப், பிரத்யேக போட்டோ-ஆப் மண்டலம் மற்றும் கேமிங் ஏரியா உள்ளிட்ட பல ஈர்க்கும் நடவடிக்கைகள் தடையின்றி ஒருங்கிணைக்கப்பட்டன.

யமஹா தனது வாடிக்கையாளர்களிடையே பெருமை மற்றும் ஒற்றுமை உணர்வை ஊட்டி, ஆழமான பந்தய பாரம்பரியத்துடன் மின்மயமாக்கும் பிராண்டாக அதன் உலகளாவிய அங்கீகாரத்தை வலுப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்த பல தளங்களில் ஒன்றாக இந்த நிகழ்வு உள்ளது.

"தி கால் ஆஃப் தி ப்ளூ ட்ராக் டே ஆக்டிவிட்டி" மூலம், யமஹா இந்தியா முழுவதும் பரவலான பார்வையாளர்களுடன் ஈடுபடுவதையும், ஒய் இசட் எஃப்-ஆர்3 (321 சிசி) கொண்ட உற்சாகமான, ஸ்டைலிஷ் மற்றும் ஸ்போர்ட்டி டூ-வீலர் வரம்பின் புதுப்பிக்கப்பட்ட 2024 வரிசையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# ம.தி.மு.க.வுக்கு பம்பரம் சின்னம் ஒதுக்க முடியாது: தேர்தல் ஆணையம் மறுப்பு தனிச் சின்னத்தில் போட்டி: துரை வைகோ




சென்னை, 27 மார்ச் 2024: ம.தி.மு.க.வுக்கு பம்பரம் சின்னத்தை தேர்தல் ஆணையம் ஒதுக்காத நிலையில், மாற்று சின்னத்தில் போட்டியிடுவோம் என்று துரை வைகோ தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க.வுக்கு திருச்சி தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகுதியில் துரை வைகோ போட்டியிடுகிறார்.

இதற்கிடையே ம.தி.மு.க.வுக்கு பம்பரம் சின்னத்தை வழங்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி சென்னை ஐகோர்ட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட், இன்று காலை 9 மணிக்குள் தேர்தல் ஆணையம் முடிவை அறிவிக்க உத்தரவிட்டது. இந்த நிலையில் சட்டப்படி குறைந்தபட்சம் 2 தொகுதியில் போட்டியிட்டால் மட்டுமே ஒரே சின்னம் ஒதுக்கப்படும் எனத் தெரிவித்து ம.தி.மு.க.வுக்கு பம்பரம் சின்னத்தை ஒதுக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இன்று பிற்பகலில் இதுதொடர்பான வழக்கு விசாரணை சென்னை ஐகோர்ட்டில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள துரை வைகோ, "பா.ஜ.க. கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு கேட்கும் சின்னத்தை ஒதுக்கும் தேர்தல் ஆணையம், நாம் தமிழர், ம.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கேட்கும் சின்னத்தை ஒதுக்காமல் ஒருதலைபட்சமாக செயல்படுகிறது.

மேலும், பம்பரம் சின்னம் ஒதுக்கவில்லை என்றாலும், வேறு சில சின்னங்களை தேர்வு செய்து வைத்துள்ளோம், அதில் போட்டியிடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

# அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 'சரணாலயம் - பெருந்திரளான குப்பைகளைத் தூய்மைப்படுத்தும்' திட்டத்தில் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி





சென்னை, 27 மார்ச் 2024: அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 'சரணாலயம் பெருந்திரளான குப்பைகளைத் தூய்மைப்படுத்தும்' - திட்டம்' வெற்றிகரமாக நிறைவடைந்ததை அறிவிப்பதில் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி மகிழ்ச்சி கொள்கிறது. கல்லூரியின் தலைமையிலான இந்த முயற்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கல்லூரி கொண்டுள்ள ஈடுபாட்டினை வெளிப்படுத்துகிறது.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் பன்னாட்டுச் சுழற்சங்கம் (ரோட்ராக்ட் கிளப்) அமைப்பைச் சார்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தங்களுக்குரிய பொறுப்பினையும் கடமையையும் உணர்ந்து ஆர்வத்துடன் துப்புரவுத் திட்டத்தில் பங்கேற்றனர். மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் மற்றும் விலங்கு பராமரிப்பாளர்களின் வழிகாட்டுதலுடன், இந்த மாணவர்கள் பூங்காவின் இயற்கை அழகைப் பாதுகாக்கும் நோக்கத்தில் பல்வேறு துப்புரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மேலும், ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சென்ட்ரல் மற்றும் அவென்யூ இயக்குநர்கள் மிருகக்காட்சிசாலையில், விலங்குகளுக்கான சிறப்பான சேவை செய்த, தகுதியான பராமரிப்பாளர்களைப் பெருமைப்படுத்தினர்.

பூங்காவில் வசிப்பவர்களின் நல்வாழ்வு மற்றும் வனவிலங்கு வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் மேற்கொண்ட முன்னெடுப்புகள் சுற்றுச்சூழல் நல்லிணக்கத்தில் அவர்கள் கொண்டுள்ள ஆழ்ந்த அர்ப்பணிப்புணர்வு ஆகியவற்றை வெளிபடுத்துகிறது. 'சரணாலயம் - பெருந்திரளான குப்பைகளைத் தூய்மைப்படுத்தும்' திட்டம் வெற்றிகரமாக நிறைவுற்றது, அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி சுற்றுச்சூழலைப் பேணுவதிலும் பொது இடங்களைத் தூய்மையாகப் பராமரிப்பதிலும் துடிப்புடன் செயல்படுவதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும் என்ற போக்கையும் உணர்த்தி நிற்கிறது.

# வேட்புமனுவையே மறந்து விட்டு வந்த திமுக வேட்பாளர் தங்கதமிழ்ச்செல்வன்




சென்னை, 27 மார்ச் 2024: தேனி தொகுதி தி.மு.க. வேட்பாளர் தங்கதமிழ்ச்செல்வன், வேட்புமனு தாக்கலுக்கு வந்தபோது, அப்படிவத்தையே மறந்து வந்து விட்டார். உடனடியாக, உதவியாளர் வேகமாக பைக்கில் சென்று வேட்புமனுவை எடுத்துக்கொண்டு ஓடி வந்தார்.

அந்த வேட்புமனுவை பெற்றுக்கொண்டு தங்கதமிழ்ச்செல்வன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார். வேட்புமனுவையே மறந்து வந்ததால் அவருடன் வந்த அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, மூர்த்தி உள்ளிட்டோர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழகத்தில் ஏப்ரல் 19 ந்தேதி நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் முடிகிறது. கடைசி நாளான இன்று ஏராளமானோர் தாக்கல் செய்து வருகின்றனர். பிரதான கட்சி வேட்பாளர்களில் பெரும்பாலானவர்கள் நேற்று முன் தினமே வேட்பு மனுவை தாக்கல் செய்து விட்டனர்.

தங்கதமிழ்ச்செல்வன் இன்று வேட்புமனு தாக்கல் செய்ய அமைச்சர்கள், தொண்டர்கள் என புடைச்சூழ திறந்த ஜீப்பில் தேனி கலெக்டர் அலுவலகம் வந்தார். அலுவலகம் நெருங்கும்போது தான், வரும் அவசரத்தில் தனது வேட்புமனு படிவத்தை மறந்து வந்துள்ளதை உணர்ந்த தங்கதமிழ்ச்செல்வன், தனது உதவியாளரிடம் இதுபற்றி தெரிவித்தார்.

# யூ பி ஐ பேமெண்டுகளை எளிமையாகக் கையாள உதவும் மோபிவிக் பாக்கெட் யூபிஐ

சென்னை, 27 மார்ச் 2024: பயனர்கள் தங்கள் நிதியை மிகவும் திறம்படவும் பாதுகாப்பாகவும் நிர்வகிக்க உதவும் அதிநவீன தீர்வுகளை வழங்குவதற்கான மேம்பட்ட தொழில்நுட்பங்களின் மூலம், ஃபின்டெக் துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

இருப்பினும், இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர் பி ஐ) சமீபத்திய தரவு, எப் ஒய்24 இன் முதல் பாதியில், 14,000 வங்கிப் பரிவர்த்தனைகள் மோசடிகள் நடந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த மோசடிகள் மிகவும் அதிநவீனமாகி வருவதால், ஃபின்டெக் நிறுவனங்கள் தங்கள் பயனர்களின் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் வலுப்படுத்துவதற்கான தீர்வுகளை முன்கூட்டியே செயல்படுத்துகின்றன.

ஃபின்டெக் நிறுவனமான மோபிவிக், அதன் பயனர்கள் பாக்கெட் யூ பி ஐ உடன் பாதுகாப்பான பரிவர்த்தனைகளை மேற்கொள்ள உதவுவதன் மூலம் யூ பி ஐ இன் ஆற்றலை மேம்படுத்துகிறது - இது அதன் டிஜிட்டல் வாலட்டின் செயல்பாட்டை மேம்படுத்தும் சக்திவாய்ந்த அம்சமாகும். பாக்கெட் யூ பி ஐ ஆனது, வங்கிக் கணக்கை நேரடியாக இணைக்காமல், அனைத்து ஆபரேட்டர்களின் கியூ ஆர்-கள் மற்றும் யூ பி ஐ ஐடிகளில் தடையின்றி பணம் செலுத்துவதற்கு, தங்கள் மோபிவிக் வாலட் ஐப் பயன்படுத்த பயனர்களுக்கு உதவுகிறது.

யூ பி ஐ பணம் செலுத்தும் போது, வங்கிக் கணக்கில் மீண்டும் மீண்டும் வெளிப்படுவதைக் குறைப்பதன் மூலம் பாக்கெட் யூ பி ஐ பாதுகாப்பை மேம்படுத்துகிறது. சிறிய மற்றும் தொடர் செலவுகளுக்கு யூ பி ஐ பணம் செலுத்துவது வசதியான விருப்பமாகும், ஏனெனில் இது சிறிய மற்றும் தொடர்ச்சியான செலவுகளை ஒருங்கிணைக்கிறது, மேம்பட்ட நிதித் தெரிவுநிலைக்காக வங்கி அறிக்கைகளை குறைக்கிறது. வங்கி செயல்படா நேரங்களிலும் இது 24/7 வேலை செய்கிறது.

பாக்கெட் யூ பி ஐஐப் பயன்படுத்தத் தொடங்குவது எப்படி? இதற்கான செயல்முறை எளிதானது:

1.முதலில், மோபிவிக் செயலியைத் திறந்து, கீழே ஸ்க்ரோல் செய்து, பாக்கெட் யூ பி ஐ என்பதைத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் பாக்கெட் யூ பி ஐ ஐடியை உருவாக்க, நீங்கள் முதலில் கே ஒய் சி ஐ நிறைவுசெய்ய வேண்டும். 2.உங்கள் மோபிவிக் வாலட் ஐ ஏற்றவும். யூ பி ஐ, டெபிட் கார்டுகள் மற்றும் கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்தி உங்கள் வாலட் இல் பேலன்ஸைச் சேர்க்கலாம்.

3.உங்கள் பேலன்ஸ் டாப்-அப் செய்யப்பட்டவுடன், நீங்கள் வாலட் மூலம் எந்த கியூ ஆர் குறியீடு, தொடர்பு மற்றும் யூ பி ஐ ஐடிக்கும் யூ பி ஐ மூலம் பணம் செலுத்தத் தொடங்கலாம்.

பாக்கெட் யூ பி ஐஐப் பயன்படுத்தி கட்டணம் செலுத்துவது எப்படி? 1.ஸ்கேன் ஐகானைத் தட்டவும். 2.பெறுநரின் கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது பெயர்/ஃபோன் எண்/யூ பி ஐ ஐடியை உள்ளிடவும். 3.அனுப்ப விரும்பும் தொகையை உள்ளிடவும். 4.கீழ்தோன்றும் மெனுவிலிருந்து பாக்கெட் யூ பி ஐ என்பதைத் தேர்ந்தெடுக்கவும். 5.பேமெண்ட்டை உறுதிப்படுத்து என்பதைத் தட்டவும். பணம் செலுத்தப்பட்டதும், உங்கள் வாலட் இல் மீதமுள்ள தொகை, பணம் செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் செய்தி ஆகியவற்றை, ஒரு எஸ்எம்எஸ் மூலம் மோபிவிக் உங்களுக்கு அனுப்பி உறுதிப்படுத்தும்.